MAY 2022 **U/ID 30620/ULA4A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. வேரில் பழுத்த பலா - ஆசிரியர் யார்?

2. அழகிரிசாமியின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் யாது?

3. மனோன்மணியம் - சிறு குறிப்பு தருக.

4. மனோன்மணி கனவில் கண்டு காதல் கொண்ட மன்னன் யார்?

5. மொழிபெயர்ப்பு - வரையறை தருக.

6. Translation – என்ற சொல் எந்த மொழியில் இருந்து வந்தது?

7. திருமுருகாற்றுப்படை ஆசிரியர் யார்?

8. ஆசாரக் கோவையை எழுதியவர்?

9. நாககுமார காவியம் - குறிப்பு வரைக.

10. நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தை தொகுத்தவர்?

11. சிறுகதை மன்னன் என போற்றப்படுபவர் யார்?

12. தமிழில் முதல் நாவல் எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. மாடசாமியின் குணநலன்களை எழுதுக.

14. குடிலன் சூழ்ச்சியை எடுத்துரைக்க.

15. மொழிபெயர்ப்பாளரின் பண்புகளை எழுதுக.

16. எட்டுத்தொகை நூல்களை கூறுக.

17. ஆசாராக் கோவை கூறும் கொள்ளத்தக்க ஆசாரங்களை எடுத்துரைக்க.

18. முதலாழ்வார் மூவரும் திருமாலால் ஆட்கொள்ளப்பட்டமை நிகழ்வினை விளக்குக.

19. சிறுகதையின் கூறுகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு 500 சொற்களில் விடை தருக.

20. காகித உறவு சிறுகதையின் வாயிலாக அறியப்படும் செய்திகளை தொகுத்து எழுதுக.

21. மனோன்மணியின் பண்பு நலன்களை எடுத்துரைக்க.

22. மொழிபெயர்ப்பின் வகைகளை விவரி.

23. எட்டுத்தொகை நூல்களில் அகம் சார்ந்த நூல்களை விளக்குக.

24. சமூகப் புதினங்கள் - விவரி.
